தொலைத் தொடர்பு தோழன்

THOLAI THODARBU THOZHAN - Tamil Monthly

மலர் - 1 VOLUME - 1	இதழ் - 4 ISSUE - 4	நவம்பர் - 2015 NOVEMBER - 2015	விலை ரூ.5/- Rs. 5/-

கருத்துரிமையின் விலை - உயிர்களும் விருதுகளுமா?

எழுத்தாளர்கள் - எந்த நாட்டிலும், எக்காலத்திலும், எழுத்துக்கும் இலக்கியத்திற்கும் மட்டும் பங்களிப்புச் செய்யாமல், தாங்கள் வாழும் நாட்டிற்கும், சமூகத்திற்கும் எதிர்காலத்தில் நன்மை விளைவிக்கக் கூடிய விதத்தில் சிறப்பான பங்காற்றி வருகின்றனர், அவர்களின் சித்தாந்தத்தில் தவறு இருப்பதாக உணர்ந்தால் கருத்துக்கள் மூலம் எதிர்வினை ஆற்றும் உரிமை பிறருக்கும் உண்டு என்று நாம் நம்புகின்ற ஜனநாயக நாடு இது,

ஆனால், சமீப காலமாக, தங்களுக்குப் பொருந்தாத கருத்துக்களை முன்வைத்ததாகக் கூறி மூன்று கருத்தாளர்கள் மற்றும் எழுத்தாளர்களின் உயிர்கள் தொடர்ந்து பறிக்கப்பட்ட செய்திகள் நாட்டை உலுக்கியது. மத்தியில் பிஜேபி ஆட்சிக்கு வந்த பிறகு இந்துத்துவ கொள்கைகளுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டவர்கள் படுகொலை செய்யப்பட்டும், தாக்கப்பட்டும் வருகின்றனர், திரு.பகவான் போன்ற சில எழுத்தாளர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் நாட்டு முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சரின் நூலை வெளியிட முற்பட்ட முன்னாள் பிரதமர் வாஜ்பாயியின் உதவியாளர் சுசீந்திர குல்கர்னியின் முகத்தில் கருப்பு மையைப் பூசிய சிவசேனாவின் செயல் நாடு முழுவதும் கண்டனத்துக்கு உள்ளானது.

இப்பிரச்னையில், மத்திய அரசின் தலைமை பீடத்தில் உள்ள பிரதமரின் மௌனமும், இந்தக் கொலைகளையும், செயல்களையும் நியாயப்படுத்தி மத்திய ஆளும் கட்சி தலைவர்களும், அமைச்சர்களும் பேசி வரும் பேச்சுகளும் மேலும் மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது,

நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே ஆகியோரைத் தொடர்ந்து சாகித்ய அகாடமி விருது பெற்ற கன்னட எழுத்தாளர் கல்புர்கி கடந்த மே மாத இறுதியில் படுகொலை செய்யப்பட்டார், அதற்கு சாகித்ய அகடமியில் கண்டன தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என விருது பெற்ற கன்னட எழுத்தாளர்கள் வலியுறுத்தினர், அதன் மத்தியக்குழு அதை மறுத்துவிட்டது. சாகித்ய அகாடமி என்பது 1953ம் ஆண்டு முதல் இந்திய படைப்பாளிகளுக்கு விருது கொடுத்து படைப்புத் திறனைப் பாதுகாக்கும் ஓர் அமைப்புக்கு, படைப்புச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் கடமை உள்ளது என்ற படைப்பாளிகளின் கருத்து சரியானதே. இந்நிலையைக் கண்டித்து, சாகித்ய அகாடமி அளித்த விருதுகளை தொடர்ச்சியாக பல எழுத்தாளர்கள் திருப்பி அளித்து தங்கள் எதிர்ப்பை உணர்த்தியுள்ளார்கள்.நயன்தாரா சேகல், கவிஞர் அசோக் வாஜ்பாய், உருது நாவலாசிரியர் ரகுமான் அப்பாஸ், மலையாள எழுத்தாளர் சுபாஷ் சந்திரன், இலக்கிய விமர்சகர் கே.எஸ்.ரவிக்குமார், காஷ்மீர் எழுத்தாளர் குலாம் நபி கயால், கன்னட எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான டி.என்.ஸ்ரீநாத், இந்தி எழுத்தாளர்கள் மங்களேஷ் தப்ரால். ராஜேஷ் ஜோஷி, பஞ்சாபி எழுத்தாளர் வர்யம் சந்து, ஆந்திரா ஜி.என்.ரங்கநாத்ராவ் என பட்டியல் நீள்கிறது.

பொதுக்குழு உறுப்பினர்கள் பி.கே.பாரக்கடவு, சசி பாண்டே ஆகியோர் குழுவிலிருந்து விலகினர். எழுத்தாளர்கள் கொள்கைகளுக்கு துணை நிற்கவும், அரசியல் சாசனம் வழங்கிய கருத்துச் சுதந்திரத்தை பேணவும் தவறி விட்டதாகக் கூறி, சாகித்ய அகாடமியின் முன்னாள் செயலாளரும், தற்போதைய உறுப்பினருமான கவிஞர் சச்சிதானந்தன் குழுவிலிருந்து விலகியுள்ளார்.

சாகித்திய அகாடமியில் நிலைப்பாட்டில் மாற்றம் வேண்டும் என்று வலியுறுத்தியும், கருத்துச் சுதந்திரத்துக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள ஆபத்து மற்றும் அச்சத்தை வெளிப்படுத்தியும், சகிப்புத் தன்மை குறைந்து வருகிறது என்ற கவலையைத் தெரிவித்தும் சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்கள் இந்திரா பார்த்தசாரதி, கி.ராஜநாராயணன், பொன்னீலன், பிரபஞ்சன், அசோகமித்திரன், தோப்பில் முகமது மீரான், கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் வைரமுத்து, ஈரோடு தமிழன்பன், மு.மேத்தா, மேலாண்மை பொன்னுசாமி, புவியரசு, நாஞ்சில் நாடன், சு.வெங்கடேசன், டி.செல்வராஜ், பூமணி கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இவ்வளவுக்கும் பிறகுதான் பிரதமர் மௌனத்தைக் கலைத்துள்ளார். வருத்தமடைவதாகவும், துரதிருஷ்டமானது என்றும் சம்பிரதாய வார்த்தைகளை உதிர்த்த அவர். சம்பந்தப்பட்ட கொலைகளைக் கண்டிப்பதாகவோ, கொலையாளிகளைக் கைது செய்ய மாநில அரசுகளை வலியுறுத்துவதாகக் கூடவோ தெரிவிக்கவில்லை. இது இத்தகைய சமூக விரோத சக்திகளுக்கு ஊக்கம் அளிப்பதாக அமையும் என்ற படைப்பாளிகளின் கவலை நியாயமானதே!

இந்நிலை தொடர்வது, அறிவார்ந்த சமூகமாக மேலும் வளர வேண்டிய நாட்டுக்கு நல்லதல்ல! மாற்றுக் கருத்தையோ, முற்போக்குக் கருத்தையோ குரல்வளையை நெரிப்பதன் மூலம் அடக்கி விட முடியாது.

கத்தியை விட பேனா வலிமையானது என்பதே வரலாறு!

நாகர்கோவிலில் BSNLன் இளைய தலைமுறை சங்கமம்

ஒப்பந்த ஊழியர்களின் விடி வெள்ளியாம் BSNL CCWF (BSNL CASUAL AND CONTRACT WORKERS FEDERATION) ன் மூன்றாவது அகில இந்திய மாநாடு நாகர்கோவிலில், அக்டோபர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் விமரிசையாக நடைபெற்றது. பல்வேறு மாநிலங்களில் இருந்து 450க்கும் மேற்பட்ட சார்பாளர்கள் பங்கு பெற்ற இந்த மாநாடு ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளை விவாதிப்பதிலும் அதை வென்றடைவதற்கான திட்டத்தை வடிவமைப்பதிலும் ஒரு மைல்கல்லாக விளங்கியது என்றால் அது மிகையாகாது.

அக்டோபர் 3 ஆம் தேதி காலை 9 மணியளவில் வாடிக்கையாளர் சேவை மையத்தில் இருந்த துவங்கிய பேரணி நகரின் பிரதான சாலையில் பயணித்து மாநாட்டு அரங்கமாம் தோழர் D.J.J.பெத்தல்ராஜ் அரங்கத்தினை வந்து சேர்ந்தது. தோழர்களின் விண்ணதிரும் கோஷங்களுக்கு இடையே, BSNL CCWFன் தலைவர் தோழர் VAN நம்பூதிரி அவர்கள் தேசியக் கொடியினையும், பொது செயலாளர் தோழர் தபஷ் கோஷ் சம்மேளனக் கொடியினையும் ஏற்றி வைத்தனர். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் வரவேற்புக் குழுவின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் A.V பெல்லார்மின் வந்திருந்த அனைவரையும் வரவேற்று பேசினார்.

CITU சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் A.K. பத்மநாபன் இந்த மூன்றாவது மாநாட்டை துவக்கி வைத்தார். WFTU வின் 70 ஆவது ஸ்தாபக தினத்தன்று துவங்கிய இந்த மாநாட்டை துவக்கி வைத்து பேசும் போது WFTU உருவான கால பின்னணியை பற்றியும், இன்றைக்கு ஏகாதிபத்தியம் செய்துவரும் அராஜகங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். மத்தியில் ஆண்டு கொண்டிருக்கும் பாஜக சர்க்காரின் நவீன தாராளமயக் கொள்கைகள் எப்பபடி நாட்டு மக்களை பாதித்துக் கொண்டிருக்கிறது என்பது தொடர்பாகவும், நாட்டில் நிலவும் சாதி மத வெறியாட்டங்கள் பற்றியும் விளக்கமாக பேசி, உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையின் தேவையை வலியுறுத்தி பேசினார். அந்த பொது அரங்கில் BSNL ஊழியர் கங்கத்தின் பொது செயலாளர் தோழர் P. அபிமன்யு AIBDPA சங்கத்தின் அகில இந்திய துணைத்தலைவர் தோழர் மோகன்தாஸ், BSNL CCWFயின் அகில இந்திய தலைவர் தோழர் VAN நம்பூதிரி மற்றும் பொது செயலாளர் தோழர் தபஷ்கோஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். வரவேற்புக் குழுவின் பொது செயலாளர் தோழர் C. வினோத்குமார் நன்றி கூற பொது அரங்கம் நிறைவு பெற்றது.

பொது செயலாளர் தோழர் தபஷ் கோஷ் மற்றும் பொருளாளர் தோழர் தபாஸ் பானர்ஜி ஆகியோர் வைத்த அறிக்கைகளின் மீது பல்வேறு தோழர்கள் விவாதங்களை நடத்தினார்கள். தமிழகத்தின் சார்பில் தோழர்கள் பழனிச்சாமி, (கோவை) இத்ரேஷ், (ஈரோடு) சவுந்திரராஜன் (தர்மபுரி) ஆகியோர் விவாதத்தில் பங்கேற்றனர். BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய துணைத்தலைவர் தோழர்

BSNLEU

உள்ளே...

கார்ட்டூன்	1
கருத்துரிமையின் விலை...	2
நாகர்கோவிலில் BSNLன் இளைய தலைமுறை சங்கமம்	3
BSNLCCWFன் புதிய நிர்வாகிகள்	4
BSNLCCWF அகில இந்திய மாநாடு...	5
நிர்வாகத்துடன் மத்திய சங்கம் சந்திப்பு	6
மனோரமா மறைந்தார்	7
33வது தேசிய கவுன்சில் முடிவுகள்	8
மத்திய சங்கத்திலிருந்து	10
FORM செய்திகள்	14
பணி ஓய்வு	15
நாம் என்ன செய்ய போகிறோம்	17
பிணம் தின்னும் சாத்திரங்கள்	19
தர்ணா போராட்டத்தின் காட்சிகள்	20

அனிமேஷ் மித்ரா, பொருளாளர் தோழர் சைபல் சென் குப்தா, உதவி பொதுச் செயலாளர்கள் தோழர் S.செல்லப்பா, தோழர் ஜான் வர்கீஸ், தோழர் பிரதாப் குமார், அகில இந்திய அமைப்புச் செயலாளர் தோழர் M.விஜயகுமார் மாநில செயலாளர்கள் தோழர் மோகனன் (கேரளா) மற்றும் நளவாடே (மஹாராஷ்ட்ரா) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

செயல்பாட்டு அறிக்கையினையும், வரவு செலவு அறிக்கையினையும் மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. இந்த மூன்றாவது அகில இந்திய மாநாட்டை சிறப்பாக ஏற்பாடு செய்த தமிழ் மாநில சங்கங்களுக்கும், குறிப்பாக நாகர்கோவில் தோழர்களையும் பாராட்டுவது உள்ளிட்ட தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஒப்பந்த ஊழியர்களுக்காக பல்வேறு கோரிக்கைகளை வகுத்தெடுத்து அதற்காக இயக்கங்களை நடத்துவது, இந்த ஸ்தாபனத்தை பலப்படுத்துவது உள்ளிட்ட மாநாட்டின் தீர்மானங்களை தமிழ் மாநிலம் முழுவதும் கொண்டு செல்வோம். வலிமையான ஒப்பந்த தொழிலாளர் அமைப்பதை உறுதி செய்வோம். அவர்களின் கோரிக்கைகள் வெற்றி பெற இணைந்து நிற்போம். ●

BSNLCCWF அகில இந்திய மாநாட்டிற்கு மாநில மத்திய BSNL ஊழியர் சங்கங்கள்

மாநாடு சிறப்பாக நடைபெற தமிழ் நமாநிலச் சங்கம் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தது. அதே போன்று அகில இந்திய சங்கமும் சுமார் 80,000 ரூபாய் மதிப்புள்ள 500 கைப்பைகளை மாநாட்டு பிரதிநிதிகளுக்கு நன்கொடையாக அளித்தது. மேலும் தலமட்டத்தில் உள்ள நமது சங்க உறுப்பினர்கள் மாநாட்டின் வெற்றிக்கு கடுமையாக உழைத்தனர்.

BSNLCCWFன் புதிய நிர்வாகிகள்

தோழர்கள்VAN நம்பூதிரி (தலைவர்), தபஷ் கோஷ் (செயல் தலைவர்), அனிமேஷ் மித்ரா (பொதுச் செயலர்) தோழர் தபாஸ் பானர்ஜி (பொருளாளர்), மற்றும் தமிழகத்தைச் சார்ந்த தோழர்கள் M.முருகையா (துணைத்தலைவர்), C.பழனிச்சாமி (உதவிப் பொதுச் செயலர்) ஆகியோர் அடங்கிய ஒன்று பட்ட புதிய நிர்வாகிகளைBSNL CWF நாகர்கோவில் அகில இந்திய மாநாடு ஏகமனதாக தேர்ந்தெடுத்துள்ளது.

புதிய நிர்வாகிகள் அனைவரையும் தமிழ் மாநிலச் சங்கம் மனதார வாழ்த்துகின்றது.

ஒப்பந்த தொழிலாளர் பிரச்சினையில் தொடர்ந்து இணைந்து செயல்படுவோம் என்று தமிழ் மாநில சங்கம் அறைகூவி அழைக்கின்றது.

மெக்காவில் கூட்ட நெரிசலில் 749 பேர் மரணம்



இந்த ஆண்டு மெக்கா புனித யாத்திரையின் போது மிகப்பெரிய சோகம் ஏற்பட்டுள்ளது. அந்தக் கூட்ட நெரிசலில் சிக்கி 749 பேர் மரணம் அடைந்துள்ளனர். ஆயிரக்ககணக்கானோர் காயமுற்றுள்ளனர். அதில் மூன்று தமிழர்கள் உள்ளிட்ட 14 இந்தியர்களும் மரண மடைந்துள்ளனர். மெக்காவில் இந்த ஒரு மாதத்தில் நடைபெற்ற இரண்டாவது சோகமாகும். மெக்காவில் இறந்த அந்த மக்களுக்கும் நமது அஞ்சலியையும். அவர்களது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களையும் உரித்தாக்கிக் கொள்கிறோம்.

BSNL CCWF அகில இந்திய மாநாட்டு கோரிக்கைகளும் போராட்டங்களும்

அக்டோபர் 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் நாகர்கோவிலில் நடைபெற்ற கேசுவல் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் அகில இந்திய மாநாடு (BSNL CASUAL AND CONTRACT WORKERS FEDERATION : BSNL CCWF) பல்வேறு கோரிக்கைகளையும் அதற்கான போராட்ட திட்டங்களையும் வகுத்தெடுத்துள்ளது.

கோரிக்கைகள் :

1. கேசுவல் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் படுத்த வேண்டும்

2. கேசுவல் தொழிலாளர்களுக்கு DOT -க்குப் பதிலாக BSNLஇல் உள்ள குறைந்த பட்ச ஊதியத்தை வழங்க வேண்டும்.

3. சம வேலைக்கு சம சம்பளம் வழங்க வேண்டும்.

4. குறைந்தபட்ச ஊதியம் ரூபாய் 15,000/-

5. சமூக நலத்திட்டங்களான பணிக்கொடை, EPF,ESI வழங்கப்பட வேண்டும்.

6. போனஸ் உறுதி செய்யப்பட வேண்டும்

7. கேசுவல்/ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு BSNL நிறுவன குடியிருப்பு, வீட்டு வாடகைப்படி வழங்கப்பட வேண்டும்.

8. விடுப்பு, வாராந்திர ஓய்வு, சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படவேண்டும்

9. EPF கணக்கை ஒப்பந்ததாருக்குப் பதிலாக BSNL துவக்க வேண்டும்

10. அடையாள அட்டையை BSNL நிறுவனம் வழங்க வேண்டும்.

11.BSNL வளர்ச்சிக்கும், விரிவாக்கத்துக்கும் தேவையான கருவிகளை வாங்கி BSNL சேவையை மேம்படுத்த வேண்டும்.

12. பழிவாங்கலை ரத்து செய்ய வேண்டும். வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை திரும்ப வேலைக்கு எடுக்க வேண்டும்.

13. மரணமடைந்த ஒப்பந்த ஊழியர் குடும்ப கருணை அடிப்படையிலான வேலை

14. மரணமடைந்த ஒப்பந்த ஊழியர் இறுதிச் சடங்கிற்கு தொகை வழங்க வேண்டும்

15. பகுதி நேர ஒப்பந்த ஊழியரை முழுநேர ஊழியராக மாற்ற வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வென்றடைய கீழ்க்கண்ட போராட்டங்கள் நடத்திட திட்டமிடப் பட்டுள்ளது:

1. நவம்பர் 2015ல் மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம்
2. டிசம்பர் 2015ல் மாநில அலுவலகங்களில் ஆர்ப்பாட்டம்
3. பிப்ரவரி 2016ல் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் (தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்)
4. பிப்ரவரி-மார்ச் 2016ல் அடுத்த செயற்குழு கூட்டம் நடத்தி வேலை நிறுத்தப் போராட்டம் உட்பட முடிவு எடுக்கப்படும்

அமைப்பை பலப்படுத்துவோம்!!!

கடந்த காலங்களில் நமது சங்கம் நடத்திய பல்வேறு போராட்டங்களையும் அதன் மீது மத்திய அரசும் நிர்வாகமும் எடுத்த நடவடிக்கைளை முழுமையாக பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் போராட்ட முடிவுகள் எடுத்துள்ளோம். கோரிக்கைகளுக்காக போராட்டங்கள் நடத்திடவும் அதில் வெற்றி பெற்றிடவும் வலுவான அமைப்பு தேவைப் படுகின்றது. எங்கெல்லாம் BSNL கேசுவல் மற்றும் ஒப்பந்த தொழிலாளர் சங்கம் இல்லையோ அங்கெல்லாம் உடனடியாக சங்கம் அமைக்க வேண்டும். சங்கம் உள்ள மாநிலங்களில் அமைப்பை வலுப்படுத்திட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மேற்கண்ட கோரிக்கைகள் ஊழியர்கள் மத்தியில் தீவிரப் பிரச்சாரம் செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

போராடுவோம்! மேலும் முன்னேறுவோம்! வெற்றி என்றும் நமதே!

நிர்வாகத்துடன் மத்திய சங்கம் சந்திப்பு

புதிய JTO தேர்வு விதிகளை அமுலாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மத்திய சங்கத்தின் வற்புறுத்தல்

புதிய JTO தேர்வு விதிகளுக்கு ஒப்புதல் வழங்கிய BSNL இயக்குனர் குழுக் கூட்டத்தின் OFFFICI MINUTES வெளியாகி உள்ளது. திருத்தப்பட்ட JTO தேர்வு விதிகளில் உள்ள கீழ்கண்ட இரண்டு நடவடிக்கைகளை உடனடியாக அமுலாக்க வேண்டும் என GM(Estt) திருமிகு மது அரோரா அவர்களிடம் 06.10.2015 அன்று சந்தித்த BSNL ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு வற்புறுத்தி உள்ளார்.

1. அனைத்து OFFICIATING JTO க்களையும் நிரந்தரமான JTO க்களாக பதவி உயர்வு வழங்குவதற்கான உத்தரவை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

2. திருத்தப்பட்ட JTO தேர்வு விதிகளின் அடிப்படையில் அடுத்த JTO LICE தேர்வு நடத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும். புதிய தேர்வு விதிகளின் அடிப்படையில் ஐந்து ஆண்டுகள் சேவை செய்துள்ள TTA க்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த தேர்வில் பங்கேற்க இயலும்.

ஊதிய தேக்கம் களைய : 16.10.2015 அன்று மனித வள இயக்குனரை சந்தித்த தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS, தோழர் பல்பீர் சிங், தலைவர் மற்றும் துணைத்தலைவர் தோழர் அசோகாபாபு ஆகியோர், பதவி உயர்வின் போது ஏற்படும் ஊதிய தேக்கத்தை தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தினர். அது மட்டுமல்லாமல் ஒரு சில குழப்பங்களின் காரணமாக ஊதியம் குறைக்கப்பட்டும் உள்ளது. விரைவில் நிர்வாக தரப்பில் இது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என மனித வள இயக்குனர் தெரிவித்துள்ளார்.

நிர்வாகத்துடன முறையான கூட்டம் : 13.10.2015 அன்று நிர்வாகத்துடன் நடைபெற்ற கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் சார்பில் பொதுச் செயலாளர் தோழர் P. அபிமன்யு அவர்களும் துணை பொதுச் செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி அவர்களும் கலந்து கொண்டனர். நிர்வாகத்தின் சார்பில், திருமிகு சுஜாதாரே DIRECTOR(HR) திரு. ஷமீம் அக்தர் Sr.GM (SR,) திருமிகு மது அரோரா GM (Estt) திரு.D.சக்கரவர்த்தி GM (RECT & Pers) திரு. ராம் ஷாகால் Addl GM (SR) மற்றும் திரு மனீஷ் DGM(Pers) ஆகியோரும் கலந்து கொண்டனர் கீழ்க்கண்ட பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன.

1. முதல் ஊதிய மாற்றத்தின் போது ஏற்பட்ட அனாமலிகளுக்கு தீர்வு : இந்த பிரச்சனையை தீர்வு காண்பதற்கு ஏற்பட்டுள்ள கால தாமதத்திற்கு தங்களின் எதிர்ப்பை ஊழியர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பல தலைமை பொது மேலாளர்கள் தாங்கள் கேட்ட விவரங்களை இன்னமும் அனுப்பவில்லை என GM (Estt) தெரிவித்தார். இதனை கேட்ட DIRECTOR(HR) மாநிலங்களில் இருந்து 15 நாட்களுக்குள் விவரங்களை பெற வேண்டும் என GM (Estt) க்கு அறிவுறுத்தியதோடு, அதன் அடிப்படையில் இந்த பிரச்சனை பரிசீலிக்கப்படும் என்றார்.

2. நேரடி நியமன ஊழியர்களுக்கு 30% ஓய்வூதிய பலன்கள்: மேலும் கால தாமதமின்றி இந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வினை DIRECTOR (HR) அவர்கள் கண்டுபிடிக்க வேண்டும் எனஊழியர் தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஊழியர்களின் ஓய்வூதிய நிதிக்கு நிர்வாக தரப்பில் 6% பங்களிப்பு தருவது என்கிற முன்மொழிவை நிதி இலாகா பரிசீலித்து வருவதாகவும், அதற்கு பின்னர் REMUNERATION COMMITTEE யின் பார்வைக்கு அனுப்பப்படும் என்று DIRECTOR (HR) தெரிவித்தார். அஸ்ஸாம் மாநிலத்தில் 01.10.2000க்கு பின் பணி நியமனம் செய்யப்பட்ட ஒரு RM இறந்துவிட்டார் எனவும், அவரது குடும்பம் ஓய்வூதியம் இன்றி தவிப்பதாகவும் தொழிற்சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதில் இறுதி முடிவு எடுக்கும் முன்னர் இந்த பிரச்சனையில் ஒரு முக்கிய பங்காற்றியவர்கள் என்ற முறையில் BSNL

ஊழியர் சங்கத்தை கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் வலிமையாக கூறியுள்ளனர். இதனை DIRECTOR(HR) ஏற்றுக் கொண்டார்.

3. **DRAUGHTSMAN கேடரில் உள்ளவர்களுக்கு மேலும் ஒரு JTO தேர்வு நடத்த வேண்டும் என்கிற தேசிய கவுன்சில் முடிவினை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள அதீத கால தாமதம்:** விவாதங்களுக்குப் பின் 31.03.2016 அன்று ஒரு ONLINE தேர்வு நடத்துவதாக DIRECTOR (HR) உறுதியளித்தார். ONLINE தேர்வு தொடர்பாக தங்களின் கருத்துக்களை ஓரிரு நாட்களில் தெரிவிப்பதாக தொழிற்சங்க தலைவர்கள் தெரிவித்து உள்ளனர்.

SC/STஊழியர்களுக்கு இலாகா தேர்வுகளில் மதிப்பெண்களை தளர்த்துவது தொடர்பான DOP&T உத்தரவுகளை அமுலாக்காதது: 13.10.2015 அன்று மனித வள இயக்குனரோடு நடைபெற்ற பேச்சு வார்த்தையில், SC/ST ஊழியர்களுக்கு இலாகா தேர்வுகளில் மதிப்பெண்களை தளர்த்துவது தொடர்பான DOP&T உத்தரவுகளை, BSNL நிர்வாகம் மீறுகிறது என நமது பொதுச் செயலாளரும், துணை பொதுச் செயலாளரும் கடுமையாக குறை கூறினார்கள். நிர்வாகத்தால் இதற்காக உருவாக்கப்பட்ட குழு SC/ST ஊழியர்களுக்கு எந்த ஒரு நன்மையையும் பயக்காத ஒரு கண் துடைப்பு அறிக்கையை கொடுத்துள்ளதாக அவர்கள் குறை கூறினர். இந்த குற்றச்சாட்டுக்களை கவனமாக கேட்ட மனித வள இயக்குனர், இட ஒதுக்கீடு தொடர்பான இந்திய அரசாங்கத்தின் உத்தரவுகளை அதன் உள்ளார்ந்த புரிதலோடு அமலாக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள GM(Pers) அவர்களுக்கு உத்தரவிட்டார். SC/ST ஊழியர்களுக்கு இந்திய அரசியல் அமைப்பு சட்டம் வழங்கியுள்ள உரிமைகள் பாதுகாக்கப்டும் என BSNL ஊழியர் சங்க பிரதிநிதிகளிடம் மனிதவள இயக்குனர் உறுதி கூறினார். கூடிய விரைவில் இந்த பிரச்சனையில் இறுதி தீர்வு ஏற்படுத்த BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து முயற்சிக்கும். ●

கலைமாமணி மனோரமா மறைந்தார்

பிரபல திரைப்பட நடிகை மனோரமா அவர்கள் 10.10.2015 அன்று உடல் நலக்குறைவின் காரணமாக காலமானார். 1937 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் பிறந்த திருமதி மனோரமா அவர்கள் மாலையிட்ட மங்கை எனும் திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி சுமார் 1500க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். 1000க்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ள அவர் கலைமாமணி மற்றும் பத்மஸ்ரீ பட்டங்களை பெற்றுள்ளார். அதிக திரைப்படங்களில் நடித்துள்ளவர் என்பதற்காக கின்னஸ் சாதனை படைத்துள்ளார். மேலும் புதிய பாதை எனும் திரைப்படத்தில் நடித்ததற்காக சிறந்த துணை நடிகைக்கான தேசிய விருதையும் பெற்றுள்ளார்.

தில்லானா மோகானாம்பாள், அன்பே வா மற்றும் பல திரைப்படங்கள் அவரது நடிப்பு திறனுக்கு எடுத்துக் காட்டும் படியாக இருந்தன. பெண் சிவாஜி என்று பலராலும் பாராட்டப்பட்டவர். 1958ல் திரைப்படங்களில் நடிக்கத் துவங்கிய ஆச்சி என்று திரை உலகினரால் அழைக்கப்படும் திருமதி மனோரமா அவர்களுக்கு 2013ஆம் ஆண்டு வெளியான தாயே நீ கண்ணுறங்கு எனும் குறும்படம் தான் கடைசி திரைப்படம்.

சுமார் 55 ஆண்டு காலம் திரைப்படங்களில் நடித்து ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ள திருமதி மனோரமா அவர்களின் மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது. அவரது பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கும், கலை உலகினருக்கும், ரசிகர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்கிக் கொள்கிறது.

33வது தேசிய கவுன்சில் முடிவுகள்

16.10.2015 அன்று நடைபெற்ற 33வது தேசிய கவுன்சில் கூட்டத்திற்கு DIRECTOR(HR) திருமிகு சுஜாதாரே தலைமை தாங்கினார்.

ஊழியர் தரப்பு செயலாளர் தோழர் P.அபிமன்யு தனது துவக்க உரையில் தேசியகவுன்சில் புதிய தலைவரான திருமிகு சுஜாதா ரே அவர்களை வாழ்த்தி வரவேற்றதுடன், அவர் அறிமுகப்படுத்தி உள்ள சங்கங்களோடு முறையான கூட்டங்கள், ஊழியர் பிரச்சனைகள் தீர்ப்பதில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்துமென அவரை பாராட்டினர். ஊழியர்களுக்கு தற்காலிக PLI வழங்க வேண்டும் என வலியுறுத்தினார். இந்த பிரச்சனைக்காக ஏற்கனவே ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளதையும், 19.10.2015 அன்று தர்ணா நடைபெற உள்ளதையும் சுட்டிக்காட்டி, இந்த ஆண்டு PLI வழங்கப்படவில்லை எனில் கடுமையான போராட்டங்களில் ஈடுபட போவதாகவும் தெரிவித்தார். அரசாங்கத்தின் தனியார் ஆதரவு, BSNL விரோத கொள்கைகள் தான் BSNLஐ பலவீனப்படுத்தியுள்ளது என்பதற்கான பல்வேறு புள்ளி விவரங்களோடு தெரிவித்த தோழர் P.அபிமன்யு, ஊழியர்கள் எந்த விதத்திலும் அதற்கு பொறுப்பேற்க முடியாது என கூறினார்.

மேலும் AIRTEL நிறுவனம் 4G சேவைகளை துவங்கி விட்டதையும், RELIANCE JIO நிறுவனம் வெகு விரைவில் துவங்க இருப்பதையும் சுட்டிக்காட்டி, BSNL நிறுவனமும் 4G சேவைகளை உடனடியாக துவங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். விரைவில் BSNL நிறுவனம் 4G சேவைகளை துவங்கவில்லை யெனில் மீண்டு வர முடியாது என தனது கவலைகளை பகிர்ந்து கொண்டார். ஊழியர் பிரச்சனைகளை தீர்ப்பதில் நிர்வாகம் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்வதற்கான தனது வருத்தங்களை பகிர்ந்து கொண்ட அவர், தேசிய கவுன்சிலின் தலைவர் இதனை ஒரு முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

கேடர் பெயர் மாற்ற பிரச்சனையில், ஊழியர் தரப்பு மற்றும் நிர்வாக தரப்பிற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் நிர்வாகத்தால் உறை நிலையில் வைக்கப்பட்டுள்ளதற்கு தனது திருப்தியின்மையை வெளிப்படுத்திய அவர் உடனடியாக அது அமுலாக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். அதேபோல BSNLMRS திட்டத்தை பரிசீலிக்க ஒரு குழு அமைப்பது என கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினை நிர்வாகம் அமுல்படுத்தாதது தொடர்பாகவும் சுட்டிக் காட்டினார். ஊழியர்களுக்கான E1 ஊதிய விகிதம் அமுலாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இந்த பிரச்சனைகள் அக்கறையுடன் கவனிக்கப்படும் என தேசிய கவுன்சில் தலைவர் உறுதி அளித்ததின் பின் ஆய்படு பொருட்களின் மீது விவாதம் நடைபெற்றது.

1) பரிவு அடிப்படையில் பணி வழங்கு வதற்கான வழிமுறைகள் பரிசீலனை: பரிவு அடிப்படையிலான பணி நியமனத்திற்கான வழிமுறைகள், இறந்தவர்களின் மகன் மற்றும் மகள்களுக்கு இல்லாமல், கணவனை இழந்த பெண்களுக்கு மட்டுமே பணி கிடைக்கும் வகையில் உள்ளது என கடுமையான ஊழியர் தரப்பு குற்றம் சாட்டியது. இந்த கொள்கையின் விளைவாக இளைஞர்களாக உள்ள படித்தவர்கள் பணி நியமனத்திற்கு வர முடியாமல் போவதோடு, நிறுவனத்திற்கு பயன் தராத, வயது முதிர்ந்த, குறைந்த தகுதி படைத்தவர்களுக்கே பணி கிடைக்கிறது. ஊழியர் தரப்பின் இந்த வாதத்தை பாராட்டிய கவுன்சில் தலைவர், வழிமுறைகள் தகுந்த முறையில் மாற்றப்படும் என உறுதியாக கண்டிப்பாக பரிவு அடைப்படையில் பணி வழங்க வேண்டும் என்கின்ற ஊழியர் தரப்பு கோரிக்கையினையும் ஏற்றுக் கொண்டார்.

2) 01.01.2007க்கு பின்னர் பணிய மர்த்தப்பட்டு விடுபட்டு போன ஊழியர் களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை வழங்குவது : இந்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதனை REMUNERATION COMMITTEE க்கு அனுப்பப்படும்.

3) அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடு விவாதிக்காமல் OUTSOURCING செய்யக் கூடாது: அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடு விவாதிக்காமல் OUTSOURCING செய்வது தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு கொண்டு செல்லும் என ஊழியர் தரப்பு உறுதி பட கூறினார்கள். ப்ராட்பேண்ட் நடவடிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் கொடுத்துள்ள மாற்று ஆலோசனைகள் கொண்ட கடிதத்திற்கு பதில்

வழங்க வேண்டும் என CFA அதிகாரிகளுக்கு DIRECTOR(HR) கேட்டுக் கொண்டார்.

4) 78.2% பஞ்சப்படி இணைப்பிற்கான நிலுவை தொகை வழங்க வேண்டும் : 78.2% பஞ்சப்படி இணைப்பு வழங்குவதற்கான உத்தரவை DOT வழங்கும்போது இதற்கான நிலுவைத் தொகை வழங்கப்பட மாட்டாது என ஒரு சரத்து உள்ளது. இது நிர்வாகத்திற்கும் FORUM த்திற்குமான உடன்பாட்டிற்கு முரணானது. இந்த சரத்தை நீக்குவதற்கு CMD BSNL இந்த விஷயத்தை DOT க்கு கொண்டு செல்ல வேண்டும் என ஊழியர் தரப்பு கோரியது. இது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

5) இரவு இலவச அழைப்பு : தனது தரைவழி தொலைபேசி சந்தாதாரர்களுக்கு இரவு இலவச அழைப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தி யுள்ளது. எனினும் ஊழியர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் இந்த வசதி விரிவு படுத்தப்படவில்லை. இதனை இவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்கின்ற ஊழியர் தரப்பு கோரிக்கையினை நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது

6. TTA க்களை மாநில கேடர்களாக மாற்றுவது: மாற்றியமைக்கப்பட்ட தேர்வு விதிகளின் படி TTA மாநில கேடராக மாற்றப்பட்டுள்ளது. முன்னர் பதவி நியமனம் செய்யப்பட்ட TTA க்கள் மாவட்ட கேடர்களாக இருக்கும்போது, புதிய தேர்வு விதிகள் வந்ததற்கு பின் நியமனம் செய்யப்பட உள்ள TTA க்கள் மாநில கேடர்களாக இருப்பார்கள். இது சீனியாரிட்டி உள்ளிட்ட பல பிரச்சனைகளை எதிர்காலத்தில் உருவாக்கும் என ஊழியர் தரப்பு சுட்டிக்காட்டியது. பதினைந்து நாட்களுக்குள் ஊழியர் தரப்பு இது தொடர்பான ஒரு குறிப்பை கொடுக்க வேண்டும் என்றும், அதன் மீது மேற்கொண்டு விவாதங்களை நடத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

7) NEPP யில் தேசிய கவுன்சில் கொடுத்த உறுதிமொழிகளை அமுலாக்குவது : NEPP யில் ஊழியர்கள் அனுபவிக்கும் சில சிரமங்களை ஊழியர் தரப்பு தேசிய கவுன்சிலில் எடுத்துக் கூறியபோது அது தொடர்பாக ஒரு கமிட்டி பரிசீலித்து வருவதாக தெரிவிக்கப்பட்டதாகவும், அந்த கமிட்டியின் அறிக்கை பற்றி எதுவும் தெரியவில்லை எனவும் ஊழியர் தரப்பு சுட்டிக்காட்டியது. 19.10.2015 அன்று அந்த கமிட்டியின் கூட்டம் நடைபெற உள்ளதாக நிர்வாக தரப்பில் கூறப்பட்டது. தொழிற் சங்கங்களின் கருத்துக்களையும் அந்த கமிட்டி கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என ஊழியர் தரப்பு கேட்டுக் கொண்டது. நிர்வாகம் அதற்கு உறுதி அளித்துள்ளது.

8) ERP அமுலாக்கத்தின் காரணமாக ஓய்வு பெறும் சமயத்தில் LEAVE ENCASHMENT பெறுவதில் கால தாமதம் : இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டு வருவதாக நிர்வாக தரப்பு பதில் அளித்துள்ளது.

9) சீருடைகளுக்கான விலையை மாற்றி அமைப்பது : இது தொடரபாக பரிசீலிக்க ஒரு குழு அமைக்கப்படும் என நிர்வாக தரப்பில் கூறப்பட்டுள்ளது.

10) விதி 8ன் கீழ் மாற்றலுக்கான தடையை நீக்குவது : இதற்கு தடை ஏதும் விதிக்கப்படவில்லை என நிர்வாக தரப்பு கூறியுள்ளது.

11) அலவன்ஸ்கள் மாற்றம் : ஊழியர்களுக்கான பல அலவன்ஸ்கள் மாற்றப்பட்டு பல ஆண்டு காலம் ஆகிவிட்டதால், அவை மாற்றப்பட வேண்டும் என ஊழியர் தரப்பு கேட்டுக் கொண்டது. நிர்வாக தரப்பு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் OTA மாற்றம் தொடர்பாக பரிசீலிக்க ஏற்றுக் கொள்ளப்பட்டது.

12) பல வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட தவறால், லட்சக்கணக்கான ரூபாய்கள் பொருமானமுள்ள மிகப்பெரிய அளவிலான தொகைகள் ஊழியர்களிடம் இருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இது போன்ற பிடித்தங்கள் செய்யப்படக்கூடாது என ஊழியர் தரப்பு கோரியது. நீதிமன்றத்தின் தீர்ப்புகள் எதுவாக இருந்தாலும், DOP&T ENDORSE செய்த பின்னரே BSNL ல் பின்பற்றப்படும் என நிர்வாக தரப்பு கூறியது. அதே சமயத்தில், கார்ப்பரேட் அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் பெருத்த சிரமத்தை சந்திக்கக் கூடிய ஊழியர்களின் பிரச்சனைகளை கார்ப்பரேட் அலுவலகம் கவனிக்கும் என DIRECTOR (HR) தெரிவித்தார்.

13) விடுபட்ட கேடர்களுக்கான பெயர் மாற்றம் : விடுபட்ட கேடர்களுக்கான பெயர் மாற்றங்கள் என்பதும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என ஊழியர் தரப்பு கோரியது. RM,TM,TTA & Sr.TOA கேடர்களுக்கான பெயர் மாற்றங்கள் தொடர்பான கூட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது இன்னமும் MANAGEMENT COMMITTEE ஒப்புதல் வழங்கவில்லை. அந்த ஒப்புதல் கிடைத்தபின் ஊழியர் தரப்பின் கோரிக்கை கவனிக்கப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

●

மத்திய சங்கத்திலிருந்து சில சிறப்பு செய்திகள்

பணிக்கொடையிலிருந்து பிடித்தம் கூடாது-உச்சநீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்த BSNL ஊழியர் சங்கம் வலியுறுத்தல்

ஊழியர்களின் ஊதிய மாற்றம், பதவி உயர்வு, அலவன்ஸ்கள் வழங்குவது உட்பட பல விஷயங்களில் முன்னர் வழங்கப்பட்ட அதிகப்படியான பணத்தை 20 அல்லது 25 ஆண்டுகளுக்கு பின்பு பணி ஓய்வு சமயத்தில் அவர்களின் ஓய்வூதிய பலன்களில் பிடித்தம் செய்து நியாயமற்றது என 28.12.2014 உச்சநீதிமன்றம் கொடுத்த தீர்ப்பினை அமுலாக்க வேண்டும் என நமது மத்திய சங்கம் DOT செயலருக்கு கடிதம் எழுதியுள்ளது. அந்த தீர்ப்பின் விவரம் வருமாறு :

".....கீழ்கண்ட சூழ்நிலைகளில் இத்தகைய பிடித்தம் சட்டத்தின்படி அனுமதிக்க முடியாது.

1) மூன்றாம் பிரிவு மற்றும் நான்காம் பிரிவு ஊழியர்களுக்கான பிடித்தம்

2)ஓய்வுபெற்ற ஊழியர்கள் அல்லது பிடித்தல் உத்தரவு வெளியிடப்பட்டு ஒரு வருட காலத்திற்குள் ஓய்வு பெறும் ஊழியர்களுக்கான பிடித்தம்

3) பிடித்தல் உத்தரவு வெளியாவதற்கு முன்பு ஐந்து ஆண்டுகள் மேல் அதிகமாக வழங்கப்பட்ட தொகை

4) குறைந்த பதவியில் பணியாற்ற வேண்டிய தகுதி உள்ள நபருக்கு, தவறுதலாக உயர்ந்த பதவியில் பணியாற்ற உத்தரவிடப்பட்டு, அதற்கு தகுந்த ஊதியம் வழங்கப்பட்டிருந்து, அதற்கான பிடித்தம்

5) ஊழியர்களுக்கு செய்யப்படும் பிடித்தம் நியாயமற்றது/கடுமையானது என நீதிமன்றம் கருதக்கூடிய எந்த வகையான பிடித்தமும்."

இந்த தீர்ப்பின் அடிப்படையில் ஊழியர்களின் ஓய்வூதிய பலன்களில் இருந்து பிடித்தம் செய்வதை நிறுத்த தொலை தொடர்பு துறை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என நமது மத்திய சங்கம் கடிதம் எழுதியுள்ளது.

டெல்லியில் மத்திய செயற்குழு

நமது BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு நவம்பர் 24 மற்றும் 25 தேதிகளில் புது டெல்லியில் நடைபெற உள்ளது. அந்த கூட்டத்தில் BSNL CMD திரு.அனுபம் ஸ்ரீவஸ்தவா மற்றும் DIRECTOR (HR) திருமிகு சுஜாதா ரே ஆகியோர் பங்கேற்க வேண்டும் என்கின்ற நமது மத்திய சங்கத்தின் வேண்டுகோளை அவர்கள் இருவரும் ஏற்றுக் கொண்டு தாங்களும் பங்கேற்பதாக உறுதி கூறி உள்ளனர்.

துணை டவர் நிறுவனம்

துணை டவர் நிறுவனம் அமைக்கப்படுவது தொடர்பாக 24.09.2015 அன்று நடைபெற்ற FORUM கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும் ஏப்ரல், 2015 இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகள் தொடர்பாகவும் விவாதிக்கப் பட்டது. மேலும் BBNL நிறுவனத்தை BHARAT NET என மாற்றப்பட்டது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. விவாதங்கள் முற்றுப் பெறாததால் 12.10.2015 அன்று நடைபெற உள்ள அடுத்தக் கூட்டத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக முடிவு செய்யப்படும்.

அனாமலி

23.09.2015 அன்று நமது சங்கத்தின் சார்பில் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS., மற்றும் தோழர் M.C. பாலகிருஷ்ணா AGS ஆகியோரும், நிர்வாக தரப்பில் திருமிகு மது அரோரா GM(Estt) திரு சிவ சங்கர் பிரசாத் DGM(Estt) ஆகியோரும் பங்கேற்ற ஒரு விவாதம் நடைபெற்றது. பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகள் உள்ளிட்ட ஒரு விரிவான அறிக்கை நமது சங்கத்தின் சார்பாக கொடுக்கப்பட்டது. அத்துடன் மீண்டும் DOT க்கு அனுப்பாமல் நிர்வாகமே உத்தரவு வெளியிட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. நமது கருத்துக்களை ஏற்றுக் கொண்ட GM(Estt) அவர்கள், மாநில அலுவலகங்களில் இருந்து விவரங்கள் வராமல் கார்ப்பரேட் அலுவலகம் எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியாது என்று தெரிவித்தார். மாநில அலுவலகங்களில் இருந்து

அறிக்கையினை பெற DIRECTOR(HR) அவர்களின் தலையீட்டை கேட்பதாகவும் அவர் கூறி உள்ளார். ஊழியர்கள் பல ஆண்டு காலமாக சிரமப்படுவதால் உடனடியாக உத்தரவு வெளியிட வேண்டும் என நமது சங்க தலைவர்கள் வலியுறுத்தி வந்துள்ளனர்

கேரளாவில் தொடரும் பழி வாங்குதல்கள்

கார்ப்பரேட் அலுவலகத்தின் உறுதி மொழிகளையும் மீறி, கேரள மாநிலத்தின் பழிவாங்குதல்கள் தொடரகிறது. மேலும் 4 தோழர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இத்துடன் சேர்ந்து கேரள மாநில நிர்வாகத்தால் 19 BSNLEU மற்றும் SNEA தோழர்கள் பணியிடை நீக்கம் செய்யப் பட்டுள்ளனர். இரண்டு மத்திய சங்கங்களும் CMD யின் தலையீட்டை கோரியுள்ளனர்.

BSNL ஊழியர் சங்கத்தின் இணையதளம் அதன் உறுப்பினர்களால் மட்டுமல்லாமல், இதர ஊழியர்களாலும், பொதுமக்களாலும் படிக்கப் படுவதால், அது தனது மதிப்பினை குறைத்துவிட்டுள்ளது எனக் கூறி M.S.S. ராவ், நமது மத்திய சங்கத்திற்கு LEGAL NOTICE கொடுத்துள்ளார். நமது இணையதளத்தால் அவருக்கு ஏற்பட்ட இழப்பாக ஒரு கோடி ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கினை பொருத்தமான முறையில் சந்திப்பது என மத்திய சங்கம் முடிவெடுத்துள்ளது.

புதிய பொது இன்சூரன்ஸ் திட்டம்

BSNLல் பணிபுரியும் நம் அனைத்து ஊழியர்களுக்கும் LIC நிறுவனம் காப்பீட்டு திட்டம் வழங்கியுள்ளது நாம் அறிந்ததே. அதை 1.08.2014 க்கு பிறகு BSNL ல் பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு நீட்டிக்க இயலாததால் அவர்களுக்கு புதிய பொது இன்சூரன்ஸ் திட்டத்தை LIC அறிவித்துள்ளது. எனவே 1.08.2014 க்கு பிறகு பணியில் சேர்ந்த ஊழியர்களை பற்றிய தகவல்களை LIC கேட்டுள்ளது.

பஞ்சப்படி உயர்வு

1.10.2015 முதல் 5.3 சதம் பஞ்சப்படி உயர்ந்துள்ளது. இத்தோடு மொத்த பஞ்சப்படி 102.6 சதத்திலிருந்து 107.9 சதமாக உயர்கிறது.

GPF பணத்தை திருப்பிக் கொடு

கார்ப்பரேட் அலுவலகம் நிதி ஒதுக்காததால் BSNL ஊழியர்களுக்கு செப்டம்பர் மாதத்தில் GPF முன்பணம் வழங்கப்படவில்லை. கார்ப்பரேட் அலுவலகத்தில் கேட்டால் BSNL செலவழித்த பணத்தை உரிய காலத்தில் DOT திருப்பித்தரவில்லை என்கிறது. ரூ 890 கோடி ரூபாய் அவ்வாறு DOT யிடமிருந்து வரவேண்டியுள்ளதாக கூறப்படுகிறது. BSNL செலவழித்துள்ள தொகையை உடனடியாக வழங்கக்கோரி மத்திய சங்கம் டெலிகாம் கமிஷனுக்கு கடிதம் எழுதியுள்ளது.

BSNL MRS கமிட்டி அமைத்தல்

14.05.2015 அன்று நடைபெற்ற 32வது தேசிய கவுன்சில் கூட்டத்தில் BSNL MRS திட்டத்தை பரிசீலிக்க ஒரு குழு அமைப்பது என முடிவு செய்யப்பட்டது. மருத்துவ செலவுகளை திரும்பப் பெறுவதில் ஊழியர்கள் படும் சிரமங்களை கணக்கில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் நான்கு மாதங்கள் கழிந்த பின்னரும் கார்ப்பரேட் அலுவலகத்தின் நிர்வாக பிரிவு இந்த கமிட்டியினை அமைக்க தடைகளை ஏற்படுத்தி வருகிறது. இந்த கமிட்டியினை விரைவில் அமைக்க வேண்டும் என நமது மத்திய சங்கம் மனித வள இயக்குனருக்கு கடிதம் எழுதியுள்ளது.

தோழர் M.L.தார் மறைந்தார்

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் மூத்த தொலை தொடர்பு தொழிற்சங்க தலைவர் தோழர் M.L. தார் 24.09.2015 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஒன்று பட்ட NFTE சங்கங்களின் மாநில செயலாளராகவும், மாநிலத்தின் AITEU Cl.III மற்றும் AITEU LS & Gr.D சங்கங்களின் மாநில செயலாளராகவும், சம்மேளனக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டவர். ஜம்மு காஷ்மீர் மாநில தலைமை பொது மேலாளர் அலுவலக மாவட்ட செயலாளராகவும் பணியாற்றி யிருந்தார். அவரது மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.

BSNL MRS திட்டத்தில் புதிய CGHS கட்டணங்களை அமுல்படுத்து

BSNL ஊழியர்கள், மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்படும் போது செலுத்தப்படும் கட்டணம் CGHS ஆல் 2010 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணங்கள் தான் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், CGHS ஆல் 17.11.2014 அன்று வெளியிடப்பட்ட புதிய கட்டணங்கள் BSNL அனுமதிக்கவில்லை. எனவே இந்த கட்டணம் அனுமதிக்கப்பட வேண்டுமென நமது மத்திய சங்கம் நிர்வாகத்திற்கு கடிதம் எழுதியுள்ளது.

திருமிகு சுஜாதா ரே அவர்களுக்கும் DIRECTOR (FIN) ஆக கூடுதல் பொறுப்பு :

தற்போது மனித வள இயக்குனராக உள்ள திருமிகு சுஜாதா ரே அவர்களுக்கு நிதி இயக்குனர் பொறுப்பையும் கூடுதலாக வழங்கி தொலை தொடர்புதுறை 21.10.2015 அன்று உத்தரவு பிறப்பித்து உள்ளது. இவர் 29.02.2016 வரை அல்லது நிரந்தரமான ஒருவர் அந்த பொறுப்புக்கு வரும் வரை அந்த பொறுப்பையும் கூடுதலாக கவனிப்பார் என அந்த உத்தரவு தெரிவிக்கின்றது.

ரிலையன்ஸ், ஏர்செல் மற்றும் சிஸ்டெமா ஆகியவை இணைகிறது

ரிலையன்ஸ். ஏர்செல் மற்றும் சிஸ்டெமா (MTS) ஆகிய நிறுவனங்கள் இணைவதற்கான பூர்வாங்க பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக பத்திரிக்கை செய்திகள் தெரிவிக்கின்றன. இது நடைபெற்றதென்றால், புதிய நிறுவனம் இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய நிறுவனமாக மாறிவிடும். முதல் கட்டமாக ரிலையன்ஸ் மற்றும் MTS ஆகியவற்றின் இணைப்பு நடைபெறும், இரண்டாவது கட்டத்தில் அத்துடன் ஏர்செல் நிறுவனம் இணையும். இது இந்திய தொலை தொடர்பு தொழிலில் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

மொபைல் சந்தாதாரர்களுக்கும் இலவச அழைப்பு வசதி-BSNL ன் புதிய திட்டம்

இந்த ஆண்டு தீபாவளி பரிசாக ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளதாக CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா பத்திரிக்கைகளுக்கு பேட்டி அளித்துள்ளார். அதன் அடிப்படையில் BSNL ன் தரைவழி தொலைபேசி வைத்திருக்கும் மொபைல் சந்தாதாரர், தனது மொபைல் தொலைபேசியிலிருந்து 'இலவச இரவு அழைப்புகளையும். இதர நவீன வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் சந்தாதாரர்கள் தங்களின் தரைவழி மற்றும் மொபைல் தொலைபேசி ஆகியவற்றின் கணக்குகளையும் இணைத்துக் கொள்ளலாம். இந்த இரண்டு கணக்குகளையும் இணைத்துக் கொள்வதன் மூலம் தங்களின் தரைவழி தொலைபேசிக்கு வரும் அழைப்புகளை மொபைல் தொலைபேசிகளிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

கேரளாவில் மாட்டிறைச்சி உண்பவர் களுக்கு எதிர்ப்பு இல்லை(?)

மகாராஷ்ட்ரா போன்ற மாநிலங்களில் பாஜக அரசாங்கங்கள் மாட்டிறைச்சி உண்பதற்கு தடை விதித்து உள்ளது. ஆனால் கேரள மாநிலத்தில் மாட்டிறைச்சி உண்பவர்களுக்கு எதிராக பாஜக போராடாது என கேரளா பாஜக தலைவர் முரளிதரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பத்திரிக்கையாளர்கள் கேட்டதற்கு அவர், "இந்திய நாட்டில் மாநிலங்களின் தட்பவெட்ப சூழல்/பூகோள ரீதியான காரணங்கள் மற்றும் கலாச்சார மற்றும் பாரம்பரிய பின்னணிகள் காரணமாக மாநிலத்திற்கு மாநிலம் உடை மற்றும் உணவு பழக்க வழக்கங்கள் மாறுபடுகின்றன. கேரளாவில்பெரும்பான்மையான மக்கள் அசைவ உணவு உண்பவர்கள். குஜராத் உள்ளிட்ட வேறு சில மாநிலங்களில் பெரும்பான்மையான மக்கள் சைவ உணவு உண்பவர்கள். நான் முன்னரே கூறியபடி, மக்களின் உணவு பழக்கங்களை முறைப்படுத்தும் எண்ணம் பாஜகவிற்கு கிடையாது என்பதால், கேரளாவில் மாட்டிறைச்சி உண்பவர்களுக்கு எதிராக போராடும் எண்ணம் எங்களுக்கு இல்லை'' என தெரிவித்துள்ளார்.

IDBI வங்கியை தனியார் மயமாக்குகிறது மோடி அரசாங்கம்

IDBI வங்கியை தனியார் மயமாக்கும் முன்மொழிவை மோடி அரசாங்கத்தின் நிதி அமைச்சகம் இறுதி செய்ய உள்ளது. தற்போது IDBI வங்கியில் அரசின் முதலீடு 76.5% உள்ளது. அதனை 49% ஆக குறைக்க அரசு முடிவெடுத்துள்ளது. இது அந்த வங்கியை தனியார்மயமாக்குவதே ஆகும். இந்த நடவடிக்கைக்கு மோடி அரசாங்கம் என்ன விளக்கம் அளிக்கப்போகிறது? இந்திய பெருமுதலாளிகள் மற்றும் பன்னாட்டு வங்கிகளுக்கு இந்திய வங்கி துறையை கொள்ளையடிக்க திறந்து வைக்கும் மோடி அரசின் முயற்சியின் ஒரு மிகப்பெரிய நடிவடிக்கையாக இது கருதப்படுகிறது.

பொதுத்துறை வங்கிகளில் அரசின் முதலீடு 52% க்கு குறைக்கப்படும் என அருண்ஜேட்லி

பங்கு விற்பனையின் இறுதி குறிக்கோள் ஒட்டு மொத்த தனியார்மயம்தான் என்பது தொழிற்சங்க இயக்கங்களின் கருத்து. உலக வங்கியின் வழிகாட்டுதல் மற்றும் புதியதாராளமய பொருளாதார கொள்கைகளின் அடிப்படையில் பொதுத்துறைகளை ஒட்டு மொத்தமாக தனியார்மயமாக்குவதை நோக்கி அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறது. மத்திய நிதி அமைச்சர் அருண்ஜேட்லியின் அறிக்கை இதனை மீண்டும் நிரூபித்து உள்ளது. 28.09.2015 அன்று நடைபெற்ற இந்திய வங்கிகளின் மாநாட்டில் கலந்துக் கொண்டு பேசும் போது பொதுத்துறை வங்கிகளில் உள்ள அரசின் பங்கை 52% க்கும் குறைவாக கொண்டு வர அரசு முயற்சி செய்து வருவதாக அவர் தெரிவித்து உள்ளது என்பது மோடி அரசாங்கம் வரும் ஆண்டுகளில் என்ன செய்ய போகிறது என்பதை தெரிவிக்கின்றது. பொதுத்துறை வங்கிகளில் தனது முதலீட்டை 52% என அரசாங்கம் கொண்டு வந்தது என்றால் மிக விரைவில் அதனை 49% ஆக மாற்றிவிடுவார்கள். அது ஒட்டு மொத்த தனியார் மயமாக்கல் தான். வங்கி துறையில் மோடி அரசாங்கம் இதனை தான் செய்ய வேண்டும் என பெரு முதலாளிகள் விரும்புகிறார்கள். இத்தகைய நாசகர முடிவினை இந்திய தொழிலாளர் வர்க்கம் எதிர்த்து போராட வேண்டும்.

ஏமாற்று வேலை

மனித சமுதாயம் இன்று சந்தித்துக் கொண்டுள்ள ஒரு பெரிய ஆபத்து பூமி வெப்பமயமாதல். பருவ நிலையில் கடுமையான மாற்றங்களை உலகம் இன்று சந்தித்துக் கொண்டுள்ளது. பூமி வெப்பமயமாவதற்கு லாப வெறி பிடித்த பன்னாட்டு நிறுவனங்கள் தான் பெரிய அளவிற்கு காரணம் என்பது உலகறிந்த ரகசியம். ஜெர்மனியை சார்ந்த பன்னாட்டு கார் கம்பெனியான வோல்க்ஸ்வாகன். வாகன புகை பரிசோதனைகளை ஏமாற்றுவதற்கான ஒரு மென்பொருளை தனது காரில் நிறுவியுள்ளது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மோசடிக்கு பின்னால் அந்த நிறுவனத்தின் CEO, மார்ட்டின் வினொர்கோர்ன் தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார். தற்போது இதர பிரசித்தி பெற்ற கார்களான ஆடி மற்றும் ஸ்கோடா ஆகியவற்றிலும் இது போன்ற வாகன புகை பரிசோதனையில் ஏமாற்றும் மென்பொருள்கள் நிறுவப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆடி நிறுவனம் 21 லட்சம் கார்களிலும், ஸ்கோடா நிறுவனம் 12 லட்சம் கார்களிலும் இது போன்ற ஏமாற்றுகளை செய்துள்ளன.

நன்கொடை

திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை STR பகுதியில் TTA ஆக பணியாற்றுபவர் தோழர் லோகேஸ்வரி. நமது மத்திய சங்கத்தின் கடும்முயற்சியின் காரணமாக 01.01.2007க்கு பின்னர் பணியமர்த்தப்பட்ட TTAக்களுக்கு பணியில் சேர்ந்தநாள் முதல் ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை பெற்றுத்தரப்பட்டுள்ளது. அதன் காரணமாக தனக்கு கணிசமான நிலுவைத் தொகை வந்த மகிழ்வை கொண்டாடும் வகையில் நமது மாநிலசங்கத்திற்கு ரூ.500/- நன்கொடை வழங்கியுள்ளார். அவருக்கு நமது தமிழ் மாநில சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

FORUM செய்திகள்

CMDயுடன் FORUM ன் CORE COMMITTEE சந்திப்பு

15.10.2015 அன்று CORE COMMITTEE உறுப்பினர்களுடன் BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா சந்தித்து வளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்பாக விவாதித்தார். தோழர் P.அபிமன்யு FORUM கன்வீனர், தோழர் C.C. சிங் FORUM தலைவர், தோழர் K.செபாஸ்டியான் GS SNEA, தோழர் பிரகலாத் ராய் GS AIBSNLEA ஆகியோர் FORUM சார்பாகவும், நிர்வாகத்தின் சார்பாக மூத்த அதிகாரிகளும் இருந்தனர். இந்த ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரைக்குமான காலத்தில் மொபைல் வருமானம் 3.49% அதிகரித்து உள்ளதாகவும், ENTERPRISE BUSINESS மூலம் 25% அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தனர். ஒட்டுமொத்த வருவாய் 1.5% அதிகரித்துள்ளது. தரைவழி தொலைதொடர்பு சேவையில் -0.3% வளர்ச்சி (எதிர்மறை) என்று கூறிய CMD, விரைவில் அதுவும் வளர்ச்சி பாதைக்கு செல்லும் என்றும் கூறினார். செப்டம்பர் மாதத்தில் மட்டும் MNPமூலமாக ஒரு லட்சம் மொபைல் சேவைகளை பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எனினும் கடந்த ஜூலை மாதத்தை ஒப்பிடும்போது மொபைல் எண்ணிக்கை குறைந்துள்ளதாக தெரிவித்த அவர், ஊழியர்கள் MARKETING பகுதியில் கூடுதல் கவனம்செலுத்த தொழிற்சங்கங்கள் ஊக்குவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். 01.01.2017 முதல் ஊதிய மாற்றத்தை அமுல்படுத்த நமது வருவாய் குறைந்த பட்சம் 5,000 கோடி ரூபாய் அதிகரிக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். விவாதங்களில் பங்கேற்ற தலைவர்கள், தலமட்டங்களில் இன்னமும், கேபிள், ட்ராப் வயர் மற்றும் 5 PAIR கேபிள்கள் உள்ளிட்ட பொருட்கள் கிடைப்பதில் கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாகவும், அதனை சரிசெய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். இந்த பொருட்களை உடனடியாக வழங்க உறுதி கூறிய BSNL CMD மீண்டும் MARKETING பணிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென FORUM தலைவர்களை கேட்டுக் கொண்டார்.

DOT செயலர் மற்றும் கூடுதல் செயலருடன் FORUM தலைவர்கள் சந்திப்பு

கடந்த FORUM கூட்ட முடிவின் அடிப்படையில், FORUM த்தின் CORE COMMITTEE உறுப்பினர்கள் 07.10.2015 அன்று DOT செயலாளர் திரு ராகேஷ் கார்க் அவர்களை சந்தித்தனர். FORUM அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு, தலைவர் தோழர் சந்தேஸ்வர் சிங், தோழர் K.செபாஸ்டியன் GS SNEA மற்றும் தோழர் பிரகலாத் ராய் GS AIBSNLEA ஆகியோர் அந்த கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். துணை டவர் நிறுவனம் அமைப்பது தொடர்பான தங்களின் கருத்துக்களை DOT செயலரிடம் FORUM தலைவர்கள் தெரிவித்தனர். மேலும் ஓய்வூதியர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பில் ஏற்படும் காலதாமதம் தொடர்பாக தங்களின் அதிருப்தியையும் தெரிவித்தனர். BSNL ஓய்வூதியதாரர்களுக்கான அடுத்தகட்ட ஓய்வூதிய மாற்றம் தொடர்பாக FORUM த்திடம் 01.05.2015 அன்று நடைபெற்ற சந்திப்பில் கொடுக்கப்பட்ட உறுதிமொழியை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என DOT செயலரை கேட்டுக் கொண்டனர். தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என DOT செயலர் உறுதி அளித்துள்ளார்.

DOT யின் கூடுதல் செயலாளராக திரு N.சிவசைலம் ஒரு சில நாட்களுக்கு முன் பொறுப்பேற்றுள்ளார். FORUM த்தின் CORE COMMITTEE உறுப்பினர்கள் அவரை சந்தித்து தங்களின் வாழ்த்துக்களை தெரிவித்தனர். BSNL இயக்குனர் குழுவில் கூடுதல் செயலாளரும் ஒரு இயக்குனராக உள்ளதால், BSNL ன் ஸ்திரத்தன்மை தொடர்பான பல விஷயங்களை விவாதித்ததோடு இந்த நிறுவனத்தை பலப்படுத்த அவரது முழுமையான ஒத்துழைப்பு தேவை என கேட்டுக் கொண்டார். நாட்டின் முதன்மையான தொலை தொடர்பு நிறுவனமாக BSNL வரவேண்டும் என்கின்ற அவரது விருப்பத்தை தெரிவித்த கூடுதல் செயலர், அதற்கான முழுமையான ஒத்துழைப்பை தருவதாக உறுதி அளித்தார்.

பணி ஓய்வு

தோழர் K.**பழனியப்பன்,** STS சேலம்

தோழர் K.பழனியப்பன் 18.02.1978ல் பணியில் சேர்ந்த காலத்திலிருந்து நமது சங்க அமைப்பில் கிளைச் செயலர் உள்ளிட்ட பல பொருப்புக்களை வகித்துள்ளார். அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்ட அவர் 31.07.2015 அன்று ஓய்வு பெற்றார். இவர் தனது பணி ஓய்வினை ஒட்டி தமிழ் மாநிலச் சங்கத்திற்கு ரூ500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் M.**குணசேகரன்,** STS(O) சேலம்

தோழர் M.குணசேகரன், 04.11.1976 பணியில் சேர்ந்த காலத்திலிருந்து தொடர்ந்து நமது சங்க சங்க உறுப்பினராக உள்ளார். கிளைத்தலைவர் உள்ளிட்ட பல பொருப்புக்களை வகித்துள்ளார். அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்ட அவர் 30.09.2015 அன்று ஓய்வு பெற்றார். இவர் தனது பணி ஓய்வினை ஒட்டி தமிழ் மாநிலச் சங்கத்திற்கு ரூ500/- நன்கொடை வழங்க்யுள்ளார்.

தோழர் A.**நாராயணசாமி,** STS(O), திருச்சி

தோழர் A.நாராயணசாமி தந்தி பிரிவில் 1978 ம் ஆண்டு பணியில் சேர்ந்த அவர் சேர்ந்த நாள் முதலாய் தொழிற்சங்க இயக்கத்தில் முன்னணி பாத்திரம் வகித்தவர். 1978ஆம் ஆண்டிலேயே தான் சார்ந்த முசிறி கிளையை K.G.போஸ் அணியின் கிளையாக செயல்படுத்தியவர் தோழர் நாராயணசாமி. திருச்சியில் நமது சங்கம் வலுப்பெற உழைத்த மூத்த தோழர்களின் ஒருவர் தோழர் நாராயணசாமி. நமது கிளை/ மாவட்ட சங்கத்தில் பல பொருப்புக்களை வகித்து திறம்பட செயலாற்றியவர். 1994ல் திருச்சிக்கு மாற்றலில் வந்த அவர் 30.09.2015 அன்று பணி ஓய்வு பெற்றார். பணி ஓய்வு பெறும் மாதத்தில் நடைபெற்ற செப்டம்பர்-2 வேலை நிறுத்தத்தில் பங்கேற்றது சிறப்பு அம்சமாகும். பாரதி புத்தகாலயம் சார்பாக ஊழியர்களுக்கு புத்தகங்களை வழங்கியுள்ளார்.

தோழர் S.**சுப்ரமணியன்,** TM திருச்சி

தோழர் S.சுப்ரமணியன் 12.03.1981 அன்று லைன்மேனாக பணியில் சேர்ந்து 34 ஆண்டுகள் பணியை முடித்து 30.09.2015 அன்று திருச்சியில் பணி ஓய்வு பெற்றார். தனது பணி காலத்தில் அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர். கிளை/மாவட்ட சங்கங்களில் பல பொறுப்புகளை ஏற்று சிறப்பாக செயல்பட்ட தோழர் சுபி என்று அழைக்கப்படும் சுப்ரமணி திருச்சியில் நடைபெற்ற அனைத்து மாநில மாநாடுகளிலும் அனைத்து FLEX போர்ட்களையும் ஒருவராக உருவாக்கியவர். அவர் தான் ஓய்வு பெறும் செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திலும் கலந்து கொண்டது சிறப்பு அம்சமாகும். அவர் தனது பணி ஓய்வினை ஒட்டி மத்திய மாநில சங்கங்களுக்கு தலா 1000/- நன்கொடை வழங்கினார். தனது பணி ஓய்வு சமயத்தில் 'மூட நம்பிக்கையில் இருந்து விடுதலை' என்று தமுஎகச தலைவர் தோழர்.அருணன் ஆற்றிய உரையினை புத்தகமாக தயாரித்து அனைத்து ஊழியர்களுக்கும் பரிசாக வழங்கி உள்ளார்.

தோழர் P.**ராமசாமி** TM, கரூர்

1977ல் தற்காலிக ஊழியராக பணியில் சேர்ந்த இவர் 1992-ல் நிரந்தரமாகி 38 ஆண்டுகள் பணி புரிந்து 31.07.2015 அன்று பணி ஓய்வு பெற்றார்.

KG போஸ் அணியில் உறுதியுடன் செயல்பட்டார். அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டார். மத்திய மாநில சங்கங்களுக்கு தலா 500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் **K.S.சம்பத்** TM, டால்மியாபுரம் திருச்சி



தந்தி அலுவலகத்தில் பகுதி நேர ஊழியராக பணிக்கு சேர்ந்து 1994-ல் Gr.D ஆக நிரந்தரமாகிய தோழர் K.S.சம்பத் 2000ல் TM ஆக பதவி உயர்வு பெற்றார். 28 ஆண்டுகள் பணியை நிறைவு செய்து 30.09.2015 அன்று ஓய்வு பெற்றார். இவர் தனது பணி ஓய்வினை ஒட்டி நமது மத்திய மாநில சங்கங்களுக்கு தலா 1001 நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் **V.கோமதி,** STM, வேலூர்

1975-ல் Short Duty ஆக பணியில் சேர்ந்த தோழர் கோமதி 1976-ல் TL ஆக பணி நிரந்தரம் பெற்றார். 39 வருட சேவையை முடித்து 31.08.2015 அன்று பணி ஓய்வு பெற்றார். நமது சங்கத்தின் உறுதியான உறுப்பினராக இறுதி வரை செயல்பட்ட தோழர் கோமதி தனது பணி ஓய்வினை ஒட்டி மத்திய மாநில சங்கங்களுக்கு தலா 500 நன்கொடை வழங்கினார்.

தோழர் **K.R.பாஸ்கரன்** CTM, மன்னார்குடி

02.06.1975 அன்று கூடு ஆக சென்னை CTOவில் பணியில் சேர்ந்து Mount Road, கரூர், தஞ்சை, மன்னார்குடி தந்தி அலுவலகங்களில் பணியாற்றினார். தஞ்சை மாவட்டத்தில் KG போஸ் அணி வளர்ச்சிக்கு உதவியவர். கிளை, மாவட்ட சங்கங்களில் பல பொருப்புகளை ஏற்று திறம்பட செயல்பட்டவர். அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர். 40 ஆண்டுகால இலாகா சேவையை முடித்து 31.07.2015 அன்று பணி ஓய்வு பெற்றார். இவர் தனது பணி ஓய்வினை ஒட்டி மத்திய மாநில சங்கங்களுக்கு தலா 500/- வழங்கினார்.

தோழர் **K.சந்திரசேகரன்**, கோவை

KC என்று அழைக்கப்படும் கோவை மாவட்டத்தலைவர் தோழர் கே.சந்திரசேகரன் 1982 ல் RM ஆக பணியில் இணைந்து 31-8-2015 அன்று TMஆக பணி ஓய்வு பெற்றார். முந்தைய கோவை DMT யில் கிளைச்செயலராக பின்னர் மாநில பொருளராக பல் வேறு தொழிற்சங்கப் பொறுப்புக்களில் திறம் பட பணியாற்றினார். கோவை மாவட்டத்தில் லைன்ஸ்டாப் சங்கத்தில் பெரும் ஸ்தாபன பிரச்சினைகள் வந்தபோது நியாயமான நிலைப்பாட்டில் நின்று இயக்கத்தை காத்து நிற்பதில் பெரும் பங்காற்றினார். பின்னர் BSNL ஆக மாறியபின் பல்வேறு பொறுப்புக்களை அலங்கரித்தவர். சங்க வேலைகள் மட்டுமன்றி திறமையான ஊழியர். மேளாக்கள் பலவற்றை நடத்தி BSNLஐ பாதுகாப்பதில் முன்னிலை வகித்தார். ஓய்வு பெறும் போது BSNLEU வின் மாவட்டத்தலைவராக சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்றார். தோழர் KC. தனது பணி ஓய்வை முன்னிட்டு மத்திய, மாநில, மாவட்ட, கிளைச்சங்கங்களுக்கு தலா ரூ 1000/ ரூபாய்களை நன்கொடை அளித்துள்ளார். ●

அனைவரின் பணி ஓய்வுக் காலமும் இனிதே அமைய மாநிலச் சங்கம் வாழ்த்துகிறது

BSNL நிறுவன நாளை ஒட்டி மனித வள இயக்குனர் திருமதி சுஜாதாரே அவர்கள் எழுதிய கடிதம்

“கடும் போட்டிக்கிடையே சரியான இடத்தை பிடிக்க ஒரு மேல்நோக்கிய பயணத்தை துவக்கியுள்ளோம். கடின உழைப்பை தொடர்ந்து காத்தால் எந்த இலக்கும் அடையமுடியாத தொலைவில் இல்லை. நிறுவன புத்தாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் பாடுபட ஒருமனதாக உறுதி எடுப்போம்.’’ என அறைகூவல் கொடுத்துள்ளார்.

நாம் என்ன செய்யப் போகிறோம்?

இந்தியாவின் அறியப்படாத ஆயிரக் கணக்கான ஊர்களில் தாத்ரியும் ஒன்று. சமீபகாலமாக உலகெங்கும் அறியப்படுகிறது. காரணம் அதனருகில் உள்ள பிஷாரா கிராமத்தில் நடந்த ஒரு வெங்கொடுமை.

மாட்டுக்கறி உண்டதாகவும் வைத்திருந்த தாகவும் கூறி 28-9-2015 அன்று இரவு ஒருவர் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவம், நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. தாத்ரியை சேர்ந்த விவசாயக் கூலியான அக்லாக், தன் வீட்டில் மாட்டிறைச்சி வைத்திருந்ததாக பரவிய வதந்தியின் அடிப்படையில் திங்களன்று ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்துத்துவா குண்டர் படை நுழைந்து முகமது அக்லாக்கையும் அவரது மகன் டானிஷையும் கொடூரமாகத் தாக்கியது. அவர்கள் இருவரையும் அந்த கும்பல் தாக்கியபடியே தெருவுக்கு இழுத்து வந்து பொதுமக்கள் மத்தியில் தொடர்ந்து தாக்கியது. இதனால் படுகாயமடைந்த இருவரையும் மீட்ட மக்கள் அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். மருத்துவமனையில் முகமது அக்லாக் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். அவரது மகன் கவலைக்கிடமான நிலையில் உள்ளார். அவர்கள் வீட்டின் குளிர்சாதனப் பெட்டியில் இருந்த மாமிசம், அவர்கள் மாட்டுக்கறி சாப்பிட்டார்கள் என்பதற்கு ஆதாரமாகக் காட்டப்பட்டது. ஆனால், பின்பு நடத்தப்பட்ட சோதனைகளில் அது ஆட்டுக்கறி எனத் தெரியவந்தது.அக்லாக்கின் மகள் இப்போது கேட்கிறாள், ”நாங்கள் உண்டது ஆட்டுக்கறிதான் என நிருபனமானால் என் தந்தையை எனக்கு திருப்பித்தருவீர்களா?”பதில் சொல்ல முடியவில்லை.

முஹம்மது அக்லாக் அடித்துக் கொல்லப்பட்ட தில்லிக்கு அருகில் உள்ள பிஷாரா என்ற கிராமத்திற்கு தேசிய சிறுபான்மை ஆணையத்தைச் சேர்ந்த குழு ஒன்று இதுதொடர்பாக விசாரிப்பதற்காகச்சென்றது. இந்துக் கோவில் ஒன்றில் இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டது என இந்த ஆணையம் கூறியிருக்கிறது.பெரும்பாலான கிராமத்தினர் தூங்கிக்கொண்டிருந்ததாகச் சொல்லும் அந்த நேரத்தில் சில நிமிடங்களில் இவ்வளவு பேர் திரண்டது, முன்கூட்டிய திட்டமிடல் இதில் இருக்குமென்பதைக் காட்டுகிறது என அந்த அறிக்கை கூறுகிறது.

நம் நாட்டின் பிரதமருக்கு இது பற்றியெல்லாம் கவலையில்லை. அவருடைய கவனமெல்லாம் வெளிநாட்டு முதலாளிகளை இந்தியாவிற்கு அழைத்து வந்து சுரண்டவும், கொள்ளையடிக்கவுமே வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்கிறார்

அக்லாக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் மத சகிப்புத்தன்மை குறித்த பெரும் விவாதங்களை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்காத பிரதமர் மோடி மீது விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டன. இது ஒரு விரும்பத்தகாத சம்பவம் என பிரதமர் மோடி கூறினார்.ஆனால் கொன்றவர்களை கண்டிக்கவோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றோ அவர் கூறவில்லை. இதுவும் கூட நாடு முழுவதும் கண்டனக்குரல் எழுப்பப்பட்ட பிறகுதான் கூறினார். அதுவும் எதிர்கட்சிகள் மீதுதான் பழியை போடுகிறார்.

இதுகுறித்து ஆர்.எஸ்.எஸ் - பத்திரிக்கையான பான்ச்ஜன்யாவில் வந்துள்ள கட்டுரையில், பசுக்களைக் கொல்லும் பாவிகளைக் கொல்ல வேண்டும் என்று வேதங்களே சொல்கின்றன என்று எழுதப்படுகிறது. எந்த வேதத்தில் எப்போது யாரால் சொல்லப்பட்டது என்ற விளக்கங்கள் இல்லை. அடித்து விடுகிறார்கள்.

அதே போல் ஹிமாச்சலில் பசுக்களை வதை செய்தார் என்ற வதந்தியை கிளப்பி சாஹித் அஹமத் என்ற 23 வயது இளைஞர் கொல்லப்பட்டார். இவையெல்லாம் வெறுமனே மதசகிப்பின்மையின் விளைவுகள் மட்டுமல்ல; தொடர்ந்த, திட்டமிட்ட வெறுப்பு பிரச்சாரமும்தான்.

ஆனால் கொடுமை என்னவெனில் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் முதன்மை நாடான பிரேசிலை பின்னுக்குத்தள்ளி விட்டு முன்னேறிக்கொண்டிருக்கும் நாடு எது தெரியுமா

தோழர்களே நமது இந்தியாதான். 2014 ல் 2,08,2000 டன் ஏற்றுமதி செய்துள்ள நாடு இந்தியா.அதுவும் முஸ்லிம் நாடுகளில் நமது நாட்டின் மாட்டிறைச்சிதான் விரும்பி வாங்கபபடுகின்றதாம். ஏற்றுமதி செய்யும் முதலாளிகளில் முதல் நான்குபேர் யார்? பட்டியலை பாருங்கள்.

எண்	கம்பனியின் பெயர்	முதலாளியின் பெயர்.
1	அல்கபீர் எக்ஸ்போர்ட்ஸ் பி.லிட்.	சதீஷ் & அதுல் சபர்வால்.
2	அரேபியன் எக்ஸ்போர்ட்ஸ் பி.லிட்	திரு. சுனில் கபூர்.
3	எம்.கே.ஆர்.புரோசன் ஃபுட்ஸ் பி.லிட்	மதன் அப்பாட்.
4	பி.எம்.எல்.இண்டஸ்ட்ரீஸ் பி.லிட்.	ஏ.எஸ்.பிந்த்ரா

முஸ்லிம் நாடுகளுக்கு மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் அதிகம் உள்ள நாட்டின் ஒரு முதல்வர் மனோகர்லால் கட்டார் (ஹரியானா) சொல்கிறார் "முஸ்லிம்கள் தொடர்ந்து இந்தியாவில் வசிக்க வேண்டும் எனில் மாட்டிறைச்சி உண்ணாதிருக்க வேண்டும்." கொடூரமான முரண்பாடு.

இவை திட்டமிட்டு நடத்தப்படும் தாக்குதல்கள் என்று மட்டும் சொல்ல முடியும்.

சமீபகாலமாகஇந்தியாவில்

* அறிவு ஜீவிகள் கூட்டம் ஏற்பாடு செய்ததற்காக மை ஊற்றப்படுகிறார்கள்.
* சிறுபான்மையினர் உணவுப் பழக்கங்களுக்காக கொல்லப்படுகிறார்கள்.
* எழுத்தாளர்கள் தனது கருத்தை வெளியிட்டதற்காக கொல்லப்படுகிறார்கள்.
* தலித்துக்கள் நாள்தோறும் கொல்லப் படுகிறார்கள்.

மார்டின் நிர்மோலர் என்ற ஜெர்மன் நாட்டு கவிஞர் எழுதிய உலக புகழ்ப்பெற்ற கவிதை

"நாஜிப் படையினர் வந்தனர்
கம்யூனிஸ்டுகளை பிடிப்பதற்கு,
நான் கம்யூனிஸ்ட் இல்லை.
எனவே கவலைப்படவில்லை.
யூதர்களை கைது செய்தார்கள்.
நான் கவலைப்படவில்லை.
ஏனென்றால் நான் யூதன் இல்லை.
தொழிற் சங்கவாதிகளை கைது செய்தார்கள்.
நான் கவலைப்படவில்லை.
ஏனென்றால் நான் தொழிற் சங்கவாதி இல்லை.
இறுதியில் நாஜிகள் என்னை கைது செய்ய வந்தார்கள்.
எனக்காக பேச யாரும் இல்லை"...

நாம் என்ன செய்யப் போகிறோம் ?

Published by **S.CHELLAPPA** on behalf of BSNL EMPLOYEES UNION, TAMILNADU CIRCLE Published from RK Srinivas Flats, No.21, Bharathiyar 1st Street, Pazhavanthangal, Chennai-600 114. Kancheepuram District. and Printed by S.KARLMARX Printed at S.K.PRINTERS, No.18/17, EWS, NH1, Eladhariyan Street, Maraimalai Nagar, Chengalpattu Taluk, Kancheepuram Distict. Editor : **S.CHELLAPPA,** Phone : 044-2267 3931, Mobile : 94440 31715, Email : bsnleutnc@gmail.com, Website : www.bsnleutnc.com

பிணம் தின்னும் சாத்திரங்கள்

தாத்ரியின் வெங்கொடுமையின் வெப்பம் அடங்கும் முன் பா.ஜா.க ஆளும் ஹரியானாவில் மேலும் ஒரு கொடூரம். ஆதிக்கசாதியின் வெறித்தனத்துக்கு பச்சிளங்குழந்தைகள் பலியான பரிதாபம். பா.ஜ.க. ஆளும் ஹரியானா மாநிலம் ஃபரிதாபாத் மாவட்டம் சன்பெத் கிராமத்தில் வசித்துவரும் ஒரு தலித் வீட்டின்மீது ஆதிக்கசாதியைச் சேர்ந்தவர்கள் 19-10-15 இரவு பெட்ரோல் ஊற்றி தீவைத்தனர். இதில் பெற்றோர் படுகாயம் அடைந்தனர். இரண்டரை வயதுக் குழந்தையான வைபவும் 11 மாதக் குழந்தையான திவ்யாவும் உடல் கருகி பலியாகினர்.

குடும்பத்தலைவர் ஜிதேந்தர் கூறுகையில் அவர்கள் எங்கள் வீட்டை முற்றுகை இட்டனர். பின்னர் கதவை வெளியே சாத்திவிட்டு ஜன்னல் வழியாக பெட்ரோலை ஊற்றினர். பெட்ரோல் வாசத்தை சுகர்ந்த நான் என் மனைவியை எழுப்பினேன். ஆனால் அதற்குள் எரிய தொடங்கிவிட்டது. என் இருகுழந்தைகளும் அத்தீயில் மாண்டுவிட்டனர் என்று கதறினார்.

சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வாக்குவாதத்தில், தன்னை ஊரைவிட்டு வெளியேறுமாறு மிரட்டிய உயர் சாதியை சேர்ந்த கும்பல் ஒன்று, மீறினால் தன்னையும் தன்குடும்பத்தினரையும் கொன்றுவிடுவதாக அச்சுறுத்தினார்கள் என அவர் கூறினார். அவர்கள்தான் இந்த செயலில் ஈடுபட்டதாக ஜிதேந்தர் செய்தியாளர்களிடம் கூறினார். தான் அந்த ஊரைவிட்டு வெளியேற தயாராக உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்

இந்தக் குழந்தைகளின் தாய் 70 சதவீதக் காயங்களோடு உயிருக்குப் போராடிவருகிறார். தந்தை ஜிதேந்தரும் காயமடைந்துள்ளார்.

இதுவரை இந்தச் சம்பவம் தொடர்பாக ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஃபரீதாபாதில் குழந்தைகளின் பிணங்களுடன் டெல்லி செல்லும் நெடுஞ்சாலையில் தலித்மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். குற்றவாளிகளைக் கைது செய்யும்வரை உடல்களை அகற்றமாட்டோம் என்று ஐஸ்கட்டிகள் மீது குழந்தைகளின் உடல்களை வைத்து போராடினர்.

பாரதிய ஜனதா கட்சியின் அரசாங்கம் நடைபெற்று வரும் ஹரியானா மாநிலத்தில் நடைபெற்ற இந்த சம்பவத்திற்கு, மோடி தலைமையிலான மத்திய அரசாங்கமும் பொறுப்பேற்க வேண்டும் என நாட்டின் முக்கிய எதிர்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் இதுகுறித்து கருத்து தெரிவித்த மத்திய அயல்துறை இணையமைச்சர் வி.கே.சிங், “சில இடங்களில் நாய் மீது சிலர் கல்லெடுத்து எறிவார்கள். இதற்கெல்லாம் அரசாங்கத்தை குறைகூற முடியுமா?” என்று ஆணவமாக கூறியிருந்தார். இதற்கு பல்வேறு கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினரான பிருந்தா காரத் இதை சாதிய திமிர் என்றும், அவர் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார். மேலும், பிரதமர் மோடி ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை காரில் அடிபட்டு இறக்கும் நாய்க்குட்டிகளோடு ஒப்பிட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தலித் குழந்தைகள் எரித்து கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கை திசை திருப்ப மத்திய அமைச்சர் முயல்கிறார் என்று குற்றம் சாட்டிய அவர், மத்திய புலனாய்வுத்துறை இந்த வழக்கு குறித்து விசாரித்து வரும் நிலையில், மத்திய அமைச்சர் ஒருவர் இவ்வாறு கருத்து தெரிவித்தால் விசாரணை எவ்வாறு முறையாக நடக்கும் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

காங்கிரஸ் மூத்தத் தலைவர்களில் ஒருவரான மணீஷ் திவாரி கூறுகையில். நாட்டில் மதப்பகைமையை தூண்ட முயலும் பாஜக பரிவாரத்தின் குரூர முகத்தை இது காட்டுகிறது என்றார்.

சமீபத்தில் சங் பரிவாரங்கள் நடத்திவரும் பிரசாரங்களின் விளைவுதான் இது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. நாட்டின் சகலபகுதிகளிலும் சாதி மத மோதல்களை தூண்டி விட்டு அதன் மூலம் குளிர் காயும் கொடூர கொள்கைகளை நாம் இனங்கண்டு கொள்வோம். இந்த கொடுமைகளை வேருடன் களைய வர்க்க ரீதியாக அணி திரட்டுவோம், அணி திரள்வோம்- அணி வகுப்போம். ■

19.10.2015 அன்று இடைக்கால PLI கேட்டு நடைபெற்ற தர்ணா போராட்டத்தின் காட்சிகள்

திருநெல்வேலி

தஞ்சை

தூத்துக்குடி

விருதுநகர்

தருமபுரி

கும்பகோணம்

மதுரை

சேலம்